செ.வெ.எண்: 32 நாள்: 12.01.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் பெண் குழந்தைகள் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே அலுவலர்கள் உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சமூக நலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறை, மாவட்ட சமூக நல அலுவலகம் சார்பில் பெண் குழந்தை பிறப்பின விகிதம் குறைவு கருத்தரங்கு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.01.2018) நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மாவட்ட திட்ட அலுவலக குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் நிலை-1 மற்றும் நிலை -2 மாவட்ட சமூக நல அலுவலக மகளிர் ஊர் நல அலுவலர் மற்றும் சமூக நல விரிவாக்க அலுவலர் என மொத்தம் 60 களப்பணியாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் பெண் குழந்தைகள் நலன், பெண் குழந்தைகளின் கல்வியினை மேம்படுத்துதல், பெண்குழந்தைகள் பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

பின்னர் இக்கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கர்ப்பிணி தாய்மார்களிடையே பெண்குழந்தையின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைக்க வேண்டும். அங்கன்வாடிக்கு வரும் கர்ப்பிணி தாய்மார்களிடையே பெண் குழந்தைகளின் பெருமைகளையும், பெண் குழந்தைகளுக்கு அரசு வழங்கும் நலத்திட்டங்களையும் எடுத்துரைத்து மேலும் குடும்ப கட்டுப்பாடு அவசியம் குறித்தும் விளக்க வேண்டும். கர்ப்பிணி தாய்மார்களுக்கு சத்தான சரிவிகித உணவுகளை வழங்கி நல்ல நிலையில் குழந்தை பிறப்பதை உறுதி செய்ய வேண்டும். பள்ளிகளில் பெண் குழந்தைகள் சேருவதையும், தொடர்ந்து படிப்பதையும் உறுதி செய்ய வேண்டும். ஆண், பெண் சரிவிகிதத்தில் இருப்பதே சமூதாயத்திற்கு நன்று என்பது குறித்தும் உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கருத்தரங்கில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ரேணுகா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.இளையராஜா, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பரணிதரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.